224708

TL
CM2''N28TV
N28 8
224708

Registered. No. M 1604. வருஷச்சந்தா. ரூபா 1.

# ஸ்ரீ தன்வந்தரி

MADRAS 1928

ஆயுர்வேத வைத்திய பக்ஷ பத்திரிகை.

ஒவ்வொரு திரயோதசிக்கும் வெளியாகும்.

சென்னை ஆயுர்வேத கலாசாலையின்

பழைய மாணவர்களின் சங்கத்தின் சார்பில் பிரசுரிக்கப்படும்.

பத்திராதிபர். டாக்டர். ஆ. லக்ஷ்மீபதி, பி. ஏ., எம். பி., ஸி. எம்.,

உதவிபத்திராதிபர் உ. ர. அரங்கசாமி ராஜு.

மலர் 1. | 1928வரு ஜனவரிமீ | இதழ். 7-8.

## பொருளடக்கம்.

———:o:———

| | | பக்கம். |
| --- | --- | --- |
| 1. | நவீன நாகரீகத்தின் சாபம் | 1—3 |
| 2. | சந்தேக வினாக்களுக்கு விடை | 3—4 |
| 3. | காலம் சென்ற ஹக்கீம் அஜ்மல்கான் | 4 |
| 4. | வியாயாம சாஸ்திரம் | 5—7 |
| 5. | குடும்ப ஔஷதங்கள் | 8—9 |
| 6. | வியாதிகளின் குறிப்பு | 9—10 |
| 7. | ஜன உபயோகமான சரக்குகள் | 13—20 |

# ஆவடி ஆரோக்கிய ஆஸ்ரம

சென்னைக்கு அருகாமையில் எல்லா சுப லக்ஷணங்களும் பொரு
பரிசுத்தமான காற்றோட்ட முடைய இயற்கைச் சிகிச்சைக் குரிய இடம்.

இயற்கைச் சிகிச்சை-சூரியஸ்நானம்.



காற்றுஸ்நானம்-ஜலஸ்நானம்.

நாற்புறமும் சூழ்ந்துள்ள ஆரண்யங்களுக்கிடையில் அமர்ந்திருக்கும் இத்தோட்டத்தின் இயற்கையான உன்னத ஸ்தானமும், மிருதுவான மணல் பூமியும், பசுமையான புல்தரையும், எவ்வேளையிலும் குளிர்ச்சிதரும் நிழலும் இவ்விடத்தை ஓர் ஆரோக்கிய வாசஸ்தலத்திற்குத் தகுதியாக ஆக்குகின்றன.

**டாக்டர் மூத்து, எம்.டி.,எம் ஆர்.ஸி.எஸ். (லண்டன்), அவர்கள்.**

மேற்படி ஆரோக்கிய ஆச்ரமத்தின் அஸ்திவாரக்கல்லை நாட்டும்பொழுது சொன்னதாவது :—

"நம்முடைய முன்னோர்கள் நல்லகாற்று வீசும் இடங்களில் வசித்தனர் நம் ரிஷிகளும் வனங்களையே விரும்பினர், அங்கேயே குடியிருந்தனர்; அவ்விடங்களிலேயே மகா நாடுகளைக் கூட்டினர்; பாடசாலைகளையும் ஏற்படுத்தினர். இது போன்ற ஆச்ரமங்கள் நம்மை மீண்டும் இயற்கை வாழ்வை அடையச் செய்ய ஹேதுவாயிருக்கின்றன, தற்கால நாகரிகம் முதிர்ந்தவர்கள் இத்தகைய வாழ்வுதான் அவசியமென்று வற்புறுத்துகின்றனர்.

மிதமான சார்ஜுகள்.

**டாக்டர் ஆ. லக்ஷ்மீபதி, பி.ஏ., எம்.பி. ஸி. எம், பிஷக்ரத்ன.**

மானேஜிங் டைரெக்டர்.

**19, ஹாரிஸ் ரோடு, மதரா**



# ஸ்ரீ தன்வந்தரி

## ஆயுர்வேத வைத்திய பக்ஷ பத்திரிகை

ஒவ்வொரு திரயோதசிக்கும் வெளியாகும்.

சென்னை ஆயுர்வேத கலாசாலையின்

பழைய மாணவர்களின் சங்கத்தின் சார்பில் பிரசுரிக்கப்படும்.

| மலர். 1. | 1928ளு ஜனவரிமீ | இதழ். 7-8. |
|---|---|---|


### நவீன நாகரிகத்தின் சாபம்

### மலபந்தம்.

*அன்பான சகோதரரே:—*

நமஸ்தே.

நீர் வெட்டவெளியில் சஞ்சரிப்பவராயிருந்தும் தேகாப்பியாசத்தில் சரியாய்ப் பழகுபவராயிருந்தும் உமக்கு அடிக்கடி விஷமசுரம் உண்டாகிற தென்பதைகேள்வியுற எனக்கு வருத்தமாயிருக்கிறது. உம்முடைய நிருபத்தின் பின்பாகம் உம் முடைய வியாதியின் கூறுகளை விளக்குகிறது. நீர் உம் முடைய வியாதி இன்ன தென்பதை அறிந்து கொண்ட ஆற்றலைக்காண எனக்குச் சந்தோஷ முண்டாகிறது. நீர் சீக்கிரத்தில் இயற்கையை ஒட்டி நடக்கும் பழக்கத்தை அறிந்து உமக்கு நீரேபரிகாரியா வீர் என்பதை நினைக்க எனக்கு இன்பாயிருக்கிறது. நம் முடைய ஒவ்வொரு நாள் வாழ்க்கையின் அனுபவமே நம் முடைய அறிவை வளர்க்குமே ஒழியவேறு எட்டுப்படிப்பால் அதிகமாய் ஒன்றும் செய்ய முடியாது.

"தயவுசெய்து மலபந்தத்தை போக்கக் கூடியதும் தினமும் காலையில் மலத்தை அகற்றக் கூடியதுமான அருமையான மருந்துகளை அனுப்பவேண்டும் ஏனெனில் மலபந்தமே எனக்கு அடிக்கடி விஷம சுரத்தை உண்டாக்குகிறது. நம்மில் ஒவ்வொருவரும் மலபந்தத்தால் பீடிக்கப் பட்டிருக்கிறோம்." என்று நீர் எழுதுவதிலிருந்து நீர் சுகத்திற்கு ஆதாரமான உண்மையைத் தெரிந்து கொண்டீர் என்பது தெற்றென விளங்குகிறது. அவ்வுண்மை என்ன வெனில் நமக்குண்டாகும் எல்லா வியாதிகளுக்கும் நம்முடைய ஆமாசயம் தான் செய்ய வேண்டிய வேலையைச் சரியாய்ச் செய்யாமையேயாகும்

...கச் சொல்லின் மலபந்தமே வியாதி ...ருக்கு எல்லாம் தாயகம்.

சகோதரரே நீர் மாத்திரம் இவ்வியாதியால் பீடிக்கப்பட்டவரல்ல சற்றேறக்குறைய நம்மில் எல்லோருக்கும் இவ்வியாதி உண்டு. இக்காலத்தில் வாலிபரும் வயோதிகரும் ஆகிய இருபாலரும் இதனால் வருந்துகின்றனர். தலைவலி, பசியின்மை, அக்கரமேறிய நாக்கு, புளி ஏப்பம், மகோதரம், நரம்புத்தளர்ச்சி, ஸ்கலிதம், இன்னும் நாட்பட்ட கணுக்கால் வாதம், பாரிசவாயு, இசிவு இன்னும் அநேக வியாதிக்கூட்டத்தை உண்டாக்குவதற்கு காரணத்தை தெரிந்து கொள்ளாமல் ஜனங்கள் அவைகளை அகற்றுவதற்கு மருந்துகளினிடத்தில் புகலிடம் தேடுகின்றனர்.

மலபந்தம் எல்லா வியாதிகளுக்கும் தாயகமாகின் அதை எப்படி நம்மைவிட்டு நீக்குவது? நாம் எங்கு சென்றபோதிலும் நம்மோடு நாம் நம்முடைய அழுக்கு நிறைந்த துருத்தியாகிய நீண்ட குடலோடு போகிறோம். அக்குடல் 27 அடி நீளமுள்ளது. அதற்குள் ஜீரணமானதும் ஜீர்ணமாகாததுமான ஆகார வஸ்துக்களைப் போட்டு அவைகளை அங்கே புளிப்பேறப் படியாகவும் அழுகும்படியாகவும் விடுகிறோம். நாம் உட்கொள்ளும் ஆகாரம் குடலுக்குள் செல்லும் வழியில் அநேக விடங்களில் அங்கே உற்பத்தியாகிற திரவப்பொருள்களோடு சேர்ந்துபோகிற தென்பதையும், அத்திரவங்கள் ஆகாரத்தில் நுழைந்து அவைகளை நமது தேகத்தின் பல்வேறு அவயவங்களுக் குறிய சாரங்களை ஆகாரத்தினின்று வேறாகப் பிரித்து சக்கையைத்தள்ளுகிறது.

தள்ளுண்ட சக்கை பெருங்குடலாகிய மலக்குடலில் வாண்டு ஒட்டிக்கொள்ளுவதை உந்த விரேசனம் வஸ்தி முதலிய பலங்களை உபயோகிக்க வேண்டியிருக்கிறது, ஆரம்பித்த வுடனே உடம்பின் எல்லா பாகத்தும் ஒரு வித கடுமையான விஷம் பரவி ஆமாசயத்திலிருந்து அருவருக்கத்தக்க வாயுக்களை கிளப்பி முகத்தில் பரு முதலிய தோலைப் பற்றி வியாதிகளை உண்டாக்கி உலர்ந்த சருமத்தையும் பிசு பிசுப்பான வியர்வையும், மஞ்சள் நிறமான கண்களையும் சுரத்தையும் களைப்பையும் உண்டாக்கி சரீரத்தைப் பழாக்குகிறது ஆகையால் மலபந்தம் மனித கோடிகளுக்கு உற்ற சத்துரு.

இச் சத்துருவொடு யுத்தம் செய்வதற்கு சூரணம், மாத்திரை, லேகியம் எண்ணெய் முதலிய ஆயுதங்கள் ஒன்றும் பயன்படா. இச் சத்துருவின் கோட்டையாகிய நமது உணவு அவைகளை நாம் உட்கொள்ளும் வகை இவைகளை மூற்று கையிட்டு நமது ஜாடராக்னி என்னும் பீரங்கிக்கு சக்தி என்னும் உணவையூட்டி வீரிய முள்ளதாய்ச் செய்து கோட்டையைத் தகர்க்க வேண்டும். ஜாடராக்னியை உற்சாக மூட்டுவதால் நம்முடைய தேகத்திலுள்ள கிரந்திகளைத் தத்தம் வேலைகளைச் சரிவரச் செய்ய ஆயுத்தமாகும். அப்படி செய்வதற்கு யோகாசனங்களும் உணவுப் பொருள்களுமே முக்கிய மானவை. அவைகளைப்பற்றி அடுத்த நிருபத்தில் வரைகிறேன். ஆனால் கீழ்க்கண்ட சில குறிப்புகள் மிகவும் முக்கியமானவை:—

1. காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் கண்கள் மூக்கு நுனியை நோக்கும்படி சில நிமிடங்கள் நேராய் உட்காரு. இந்நிமிடங்களை கடவுளை தியானிப்பதற்கு உபயோகி. இப்படிச் செய்வதால் மலம் ஆசனவாயிலுக்கு இறங்கும்.

2. காலையில் மலப்பிரவர்த்தியாகாவிட்டால் கவலைகொள்ளாதே. ஒரு கோப்பை ஜலத்தில் சிறிது உப்பைச் சேர்த்து மெதுவாக் குடித்து விட்டு வெட்ட வெளியில் சிறிது தூரம் ஓடு.

3. கூடுமானால் கடிஸ் நானம் செய் அல்லது ஸ்நானம் செய்யும் போது ஈரத் துணியால் நாபியைச் சுற்றிலும் வலது பக்கமிருந்து இடது பக்கமாய் மெதுவாகப் பிடித்து விடு.

4. சாப்பாட்டிற்கு ஒருமணிநேரம் முன்னும் பின்னும் போதுமான ஜலத்தை உட்கொள்ளு ஆனால் சாப்பிடும் போது ஜலம் அதிகமாய் உட்கொள்ளாதே.



5. ஒரு நாளில் இரண்டு முறை ஆகாரம் உட்கொள்ளு காலையில் 10-மணிக்கும் 11-மணிக்கு இடையிலும் மாலையில் 7-மணிக்கும் 8-மணிக்கு இடையிலும் ஆகாரம் எடுத்துக் கொள்ளு. "உன்னுடைய எதிரிக்குத் துன்பமிளைக்க வேண்டின் அவனை ஆகாரத்திற்கு மத்தியில் ஏதாவது தின்னச்செய்" என்று சுவாமி ராமதீர்த்தா சொல்லுகிறார். இதை ஒட்டியே "நண்மை நுகரேல்," என்பதும் சொல்லப்பட்டது.

6. ரொட்டி சப்பாத்தி முதலியவைகளோடு கீரைவகைகளை அதிகமாய் உபயோகி. அவைகளை நன்றாய் மென்று உட்கொள்ளு.

7. கூடுமானால் அரிசி பருப்பு முதலிய மிருதுவான ஆகாரப் பொருள்களைவிடு. கோதுமையை அதிகமாய் உபயோகி.

8. காப்பி, டி, மிளகாய் முதலியவைகளை அதிகமாய் உட்கொள்ளாதே.

9. மத்தியான சாப்பாட்டிற்குப் பின் கொஞ்ச நேரம் ஓய்வெடு. இராசாப்பாட்டுக்குப் பின் கொஞ்சதூரம் நட. ஆனால் தற்காலத்தில் 11 ஆபீசுக்கும் 10-மணி பள்ளிக்கூடத்திற்கும் விரைந்து செல்லும் வழக்கத்தால் நாம் நம்முடைய வயிற்றுக்குப் போதுமான ஓய்வு கொடுக்க முடியாமற் போகிறது. அதற்குச் செய்ய வேண்டிய உபாயம்யாது? காலை பள்ளிக்கூடத்திற்கும் ஆபீசுக்கும் உங்களால் ஆனவரை பிரயாசப்படுங்கள். முடியாவிட்டால் 10-மணிக்குள் சாப்பிட ஆரம்பியுங்கள். ஆனால் மெதுவாய் நன்றாய் மென்று சாப்பிடுங்கள். சாப்பாட்டிற்குப் பின் அரை மணி நேரம் ஓய்வெடு.

10. எப்பொழுதும் இடதுகையில் படுத்துறங்கு. இது ஜீரணத்திற்கு ஆதாரமான ரசங்களைவயிற்றில் சேர்ப்பதற்கும் ஆகாரத்தைப்பிசைந்து ரசத்தை எடுப்பதற்கும் வயிற்றுக்கு உதவியாயிருக்கிறது.

'பிரம்மச்சாரியா'

---

## சந்தேக வினாக்களுக்கு வி...

நமது சந்தா நேயர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஔஷத யோகம் என்னும் பத்திகளிலுள்ள சில அரும் பதங்களுக்கு உரையும் அரிய சரக்குகள் கிடைக்கும் இடமும், அவ்வரிய சரக்குகள் கிடைக்காவிடத்து உபயோகிக்க வேண்டிய சரக்குகளின் பெயரும் கீழ்க் குறிப்பிடப் படுகின்றன.

| | |
|---|---|
| அரிஷ்டம் | ஒரு விதமானமது. |
| அபயா | கடுக்காய். |
| ஹரீதகி | ,, |
| த்ருவ்ருத் | சிவதை. |
| தாதகி | காட்டாத்திப்பூ. |
| இந்த்ர வாருணீ | வரிக்கும் மட்டிக்காய். |
| தந்தி மூலம் | காட்டு ஆமணக்கின் வேர். |
| படோலம் | பேய்ப்புடல். |
| சால்மலி | இலவம் பிசின். |

சந்திபந்தனம்:—சட்டியின் மேல் மற்றொரு செட்டியின் வாய் பொருந்தும்படி மூடி அங்கேயிருக்கும் சந்தை மூடும் படி சீலைமண் செய்தல்.

குட்சி ரோகம்:—அடிவயிற்றைப் பற்றின ரோகம்.

| | |
|---|---|
| அர்சோ ரோகம் | மூலமுளை. |
| அர்ஜுன | மருத மரம். |
| அஸ்வ கந்தா | அமுக்கிராங் கிழங்கு. |
| ஹரீத்ரா | மஞ்சள். |
| தாரு ஹரீத்ரா | மரமஞ்சள். |
| யஷ்டிமது | அதி மதுரம். |
| ரா நா | சித்தரத்தை. |
| முஸ்தா | கோரைக் கிழங்கு. |
| ப்ரக்ஷேப சூர்ணம் | கல்க்கச் சூரணம். |
| பத்ரம் | லவங்கப் பத்தரி. |
| நாக கேசரம் | சிறு நாகப்பூ. |

அசோகம்:—இம்மரம் இலங்கையில் ஏராளமாக விருக்கிறது. இந்நாட்டில் நாரமாடி என்னும் நெட்டிலிங்க மரப்பட்டையை உபயோகிக்கிறார்கள். இது அசோக மரத்தின் குணத்தை ஒத்திருக்கிறது.

குடம்-வெல்லம், கிருஷ்ணஜீரகம்-கருஞ் சீரகம், வாஸா மூலம்-ஆடாதோடை வேர். குசுமரோகம்-வெள்ளை ரோகம்.

...லா-சிற்று முட்டி, குருந்தோட்டி. சதாவரி-...ண்ணீர் முட்டான் கிழங்கு. ஏரண்ட மூலம்-...மணக்கன் வேர். ப்ரஸாரணி-முதியார் ...ந்தல். ஆஸவம்-மருந்துச் சரக்குகளை ஜலத்...ல் போட்டு காய்ச்சாமல் செய்யும் ஒரு வித...து.

ஆமலகி — நெல்லிக்காய்.
சாரிபா — நன்னாரி.
அனந்த மூலம் நன்னாரி,

...தசமூலம்:—சிறு மல்லி, பெரு மல்லி, ...ண்டவ் கத்திரி, சிறு வழுதுணை, நெருஞ்சி, ...ல்வம், முன்னை, பெருவாகை, பாதிரி இவைகளின் வேர்.

க்வாத — கஷாயம்.
லோத்ரா — கரு வேலம்பட்டை.
குடேசி — சீந்தில்.
துராலபா — அருகு.
கதிரா — கருங்காலி.
ப்ரியங்கு — நாணல்.
வருணத்வர் — வருணப் பட்டை.
பாஷாணபேதி — சிறு பீளை
கதிர — கருங் காலி.
ஜீவக — சீந்தில்.
பாரங்கி — கண்டு பாரங்கி.
ரிஷபக — சீந்தில்.
கபித்தம் — விளாம் பழம்.

...மேதாத்வயம்.—மேதா, மகா மேதா } அமுக்கிருங் கிழங்கு

நத்தித்வயம்:—ருத்தி, விருத்தி } நிலப் பூசனிக் கிழங்கு

புனர்னவா-சாறணை.
ரேணுக — காட்டு மிளகு.

...காகோலித்வயம்:—காகோலி, க்ஷீரகாகோலி } தண்ணீர் முட்டான் கிழங்கு

பத்ம காஷ்டம்-தாமரை வளையம்.
மாம்ஸி — ஜடா மாஞ்சி.
த்வக் — லவங்கப் பட்டை.
ப்ரியங்கணம்பூ-நாணற்பூ.
பிப்பலி — திப்பலி.

ஜீவக, ரிஷப மேதா, மகாமேதா, காகோலி, க்ஷீரகாகோலி இச்சரக்குகள் ஹிமாலயப் பிரதேசத்தில் கிடைக்கும். இச்சரக்குகள் வேண்டியவர் ஆந்திர ஆயுர்வேத பார்மஸிக்கு எழுதவும்.

---

# காலம் சென்ற ஹக்கீம் அஜ்மல்கான்.

நமது நாட்டின் விடுதலைக் காகப் பாடுபட்ட இவர் 1927 வருடத்தின் இறுதியில் மண்ணுலகை விட்டு விண்ணுலகம் எகினார் என்னும் செய்தியை செவியுற நாம் பெரிதும் வருந்துகின்றோம்.

ஹக்கீம் அஜ்மல்கான் வைத்திய பரம்பரையில் உதித்தவர். இவருடைய முன்னோர்கள் பேபர் மகாராஜாவின் அரண்மனையிலிருந்து அநேக சன்னதுகளைப் பெற்றவர்கள்.

அஜ்மல் கானின் பாட்டனாகிய ஹக்கீம் ஷெரிவ்கான் கீர்த்தி வாய்ந்த அநேக வைத்திய நூற்களை இயற்றி அதனால் பலராலும் கொண்டாடப் பட்டார். ஷெரிவ்கானின் மகனாகிய ஹக்கீம் மகமத்கான் தன்னுடைய முன்னோர்களின் காலடிச் சுவடைப் பின் பற்றி வைத்தியத்தில் மிகவும் கீர்த்தியடைந்த தோடு டெல்லி யிலிருந்த யூனானிவைத்திய பாடசாலையை உன்னத நிலைமைக்குக் கொண்டு வந்தார்.

ஹக்கீம் அஜ்மல்கான் தன்னுடை சிறிய வயதிலேயே தகப்பனால வழிகாட்டப்பட்டு இஸ்லாமிய பலசாஸ்திரங்களில், தான் அடைய வேண்டிய அறிவையடைந்ததோடு வைத்தியத்திலும் திறமையடைந்தார். இவருடைய தந்தையின் காலத்திற்குப்பின் இவர் டெல்லி டிப்பி ஆயுர்வேத யூனானிகலாசாலையைப் பலரும் போற்றும்படியான நிலைமைக்குக் கொண்டு வந்தார், அதற்காக இவர் எடுத்துக் கொண்ட சிரமமும் விடாமுயற்சியும் சாலப் பெரியன.

இவருக்குப் பிறரிடத்தில் இரக்கமும் அன்பும் மிகவுண்டு. இவருடைய காலமுழுவதிலும் மகமதியருக்கும் இந்துக்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப் போக்கிச் சமாதானத்தை உண்டாக்க முயன்றார்.

இவருடைய ஆற்றலையும் தேசபக்தியையும் கண்ட ஜனங்கள் இவரை 1921 வருடம் ஆமதாபாத்தில் நடந்த அகில இந்திய தேசிய மகாநாட்டிற்குத் தலைவராக்கினார்கள்.

எல்லாம் வல்ல ஈசனை இவருடைய ஆத்மாவுக்குச் சாந்தியையும், இவர் நடத்திவந்த இயக்கத்திற்கு வெற்றியையும் கொடுக்குமாறு இரந்து வேண்டுகிறோம்.


பத்திராதிபர்.

1708


ஆவடி ஆரோக்கிய ஆஸ்ரமம்.




தோட்ட நகரின் திறப்புவிழாவில்
கான்பகதூர் ஹக்கீம் அப்துல் அஸீஸ் சாஹிப்பும் மற்றவர்களும் (26-1-27).



காளஹஸ்தி ராஜா.



இந்திராலயா இரட்டை விடுதியின் தென்பாரிசத்தோற்றம்.



கீழ் கோடியின் பயின் மரத்தோப்பு.

(2) இரசபட்பத்தை ஒரு தானிய எடை ரஸாஞ்ஜனத் தூள் 2 தானிய எடை எருக்கன் வேர் பட்டை 5 தானிய எடையை தேனோடு கலந்து மாத்திரையாக்கி ஒரு மாத்திரை விகிதம் தினம் 2,3 தடவை ஸ்லீபதத்திற்கும் (யானைக்கால்) பறங்கிரோகத்திற்கும் கொடுக்கலாம்.

(3) எருக்கின் பச்சைப் பூவோடு சம எடையான மிளகைச் சேர்த்து தேன் விட்டரைத்து 5 தானிய எடையுள்ள மாத்திரைகளாக்கி கல்கார்க்கு புட்டியிலிட்டு உபயோகித்து வரலாம்.

பாம்பு கடிக்கு:—எருக்கன் பாலை கோலியளவு மாத்திரை செய்து வெற்றிலையால் மூடி ஒவ்வொரு மணிக்கொரு தரம் விகிதம் வமனம் வரும் வரையில் கொடுக்கலாம். இரண்டு தடவைக்குப் பின் மாத்திரையின் அளவைக் குறைத்து ஒன்பது தரம் கொடுக்கவும். மேலே சொன்ன அளவை தண்ணீரில் கரைத்து பிணியாளி விழுங்க முடியாத நிலைமையில் கொடுக்கலாம். பாம்பு கடித்தவுடன் இரண்டு மூன்று எருக்கன் இலையை சாப்பிடச் செய்யவும். எருக்கன் வேரை தண்ணீரில் உரைத்து கடிவாயில் வைப்பதோடு அதையே கண்களுக்கு அஞ்ஜனமாக இடவேண்டும். ஒரு தோலா எருக்கன் வேர் பட்டையின் சுவரஸத்தை பாம்புக் கடிக்குக்கொடுக்கலாம்.

சிருதம். 10 முதல் 12 உலர்ந்த புஷ்பங்களை 5 தோலா நெய்யோடு சேர்த்துக்காய்ச்சிவடி கட்டி ½ முதல் 1 தோலா நெய்யைச் சேவிக்கலாம்.

224708

தைலம். எண்ணெயோடு எருக்கன் பாலையும், வெள்ளாட்டின் பாலையும், புளியமர [illegible]லையின் சாறும், கோசின் வரலமும் [illegible]ர்த்துக் காய்ச்சுவது. (அர்க்காதி தைலம் [illegible].)

புஷ்பம். உலர்ந்த புஷ்பங்களை சம எடையான மிளகும், உப்பும் சேர்த்துச் சூர்ணித்து அதை 3 முதல் 10 தானிய எடை தினத்திற்கு இரண்டு தடவை கொடுக்கலாம். லேகியமாகவும் கொடுக்கலாம்.

க்ஷாரம். இந்தச் செடியின் க்ஷாரத்தை 1 முதல் 5 தானிய எடை உள்ளுக்குக் கொடுக்கலாம்.

வெளிப் பிரயோகம். இலையை விளக்கெண்ணெய்யால் பூசி சூடுண்டாக்கி வீக்கமுள்ள இடங்களிலும் வீங்கின குதத்திலும் அல்லது மூலத்திலும் கட்டலாம். ஒரு பிடி இலையை எடுத்து அதின் நரம்பை கத்தியால் சேதித்து விட்டு அவைகளை ஒரு சுருளாகச் செய்து அந்தச் சுருளை உஷ்ணமான எண்ணெயில் தோய்த்து வெது வெதுப்பாக வலியுள்ள கீல்களின் மீது ஒற்றடம் கொடுக்க. பழுத்த இலைகளை வாட்டிச் சார் எடுத்து வலியுள்ள காதுகளில் விட கர்ண சூலை தீரும். புதிய பாலை உப்போடு சேர்த்து சிறியவெட்டுக் காயங்களுக்கும், சுளுக்குகளுக்கும், வலியுள்ள பற்களுக்கும், வலியுள்ள கீல்களுக்கும், நரம்புகளுக்கும், கட்டிகளுக்கும் போடலாம். பாலையாவது, இலையின் சாரையாவது தேள் கடித்த இடத்தில் தடவவும். இந்தப் பாலைத்தடவின இடத்தில் இருக்கும் ரோமங்கள் உதிர்ந்து விடும். ஆனால் இதை தலையில் வரும் வண்டு கடிக்குத் தடவலாம்.

**வேர்.** வேரை கழிநீரினுல் அரைத்து லேபமாக்கி ஸ்லீபதம் (யானைக்கால்) வீக்கம் இவைகளுக்குத் தடவ குணந் தரும்.

**செய்கை.** அதிக அளவில் கொடுத்தால் வாந்தியையும் பேதியையும் உண்டாக்கும். அங்காகர்ஷண காசகாரி, கப ஹரகாரி, முறை வியாதி ரோதி, அஜீர்ண ஹரகாரி, பறங்கி ரோகஹர காரி, தட்டைப் புழுக்களை மாற்றுவதிலும், வியர்வையை உண்டாக்குவதிலும், ருது வர்த்தனகாரி, ரக்த சுத்தி செய்வதிலும், பலம் கொடுப்பதிலும் (சிறிய அளவில் கொடுத்தால்) சிறந்தது.

**உபயோகம்.** எருக்கில் இரண்டு விதமுண்டு ஒன்று வெள்ளெருக்கு, மன்ருென்று சாதாரணமானது, புஷ்பங்களைக் கொண்டே தீர்மானிக்க வேண்டும். வெள்ளெருக்கு மிகவும் சிறந்ததென்று சொல்லப்படுகிறது. இது அநேக கைதேர்ந்த மருத்துவர்களால் அதிக பிரயோஜனத்தோடு கையாடப்பட்டு வருகிறது. இதனுடைய பிரயோஜனம் அவர்கள் கொடுக்கும் அளவையும் ஆகாரத்தை ஆதாரமாயுடையது. கைதேர்ந்த வைத்தியர்களின் கையில் இம் மருந்து அமிர்தத்திற் கொப்பானது. கெட்ட மருத்துவர்கள் கையில் இது உயிரைப் போக்கும் சரக்கு. அப்படியே இக்காலத்தில் கையாடி வருகிற கொடுமையான ஊசிகுத்தலும் (Injections containing verulent poisons such as arsonic).

ஆஸ்துமாவில் சுவாஸ ரோகத்தில் உண்டாகும் இசிவுகளிலும் வாத கோயிலுண்டாகும் வலிகளுக்கும் இது மிகவும் சிலாக்யமான மருந்து. இதனுடைய பாலை வலியுள்ள கீல்களைச் சுற்றிலும் தடவி மஞ்சள் தூள் போடுவது வழக்கம். இதனுடைய பூவினுல் செய்த லேகியத்தையும், இதனுடைய வேரின் பட்டையோடு மிளகு சேர்த்தரைத்த தூளையும் நாட் பட்ட ஸ்வாஸ காஸங்களில் உபயோகித்து வருகிருர்கள். இதை கூட்டுச் சரக்குகளோடு கூட்டி புளியேப்பத்திலும், அஜீர்ணம் அதிசாரம், காலரு, இருதய வியாதி, பறங்கிப் புண், குஷ்டம், வெள்ளை, வெட்டை, மகோதரம், ஜலோதரம், வாதகோய், ஆஸ்துமா, விஷமஜ்வரம், தோல் வியாதி இவைகளில் உபயோகித்து வருகிருர்கள். வங்கசேனன் இதை முகத்தில் விழும் கருத்ததழும்புகளுக்கு மஞ்சளோடு கூட்டி உபயோகிக்கச் சொல்லுகிருர். வேரின் பட்டையை பொடி செய்து அதனுடைய பாலில் ஊறவைத்து வெய்யிலில் உலர்த்தி சுருட்டுகளாகச் செய்து காலத்திலும், ஸ்வாஸத்திலும் உபயோகிக்கிருர்கள். மூக்கிலும், தொண்டையிலும் சதை வளர்ந்து சுவாஸத்தை தடையுண்டாக்கும் வியாதிகளில் இந்த மூலிகையின் பூவை மூக்குத்துவாரங்களுக்கு கோரப் பிடித்துக் கொண்டு விரலினுல் அதைத் தட்டஅதிலிருந்து மேற்கிளம்பும் மகரந்தம் தொண்டை, மூக்கு இவைகளில் மேலே போய் அச்சதை வளர்ச்சிகளை அறுத்து வியாதியைப் போக்குகிறது. (இது ஒரு கைதேர்ந்த சிகிச்சை) இதனுடைய இலைகளை ஒரு சட்டியிலிட்டு மேல் சட்டி மூடி கல்லுப் போடு சேர்த்து எரித்த சாம்பலை ப்லீஹம், பக்ருத் இவைகள் வளர்வதால் உண்டாகும் வியாதிகளிலும், கிருமியிலும், அதிசாரத்திலும், (3 முதல் 10 தானிய எடை) கொடுக்கப்படுகிறது.



### எருக்கின் விஷத்திற்கு முறிவு.

(1) அவுரிச் செடி இலையின் ஸ்வரஸம்

(2) சர்க்கரையை தண்ணீரில் கலந்து கொடுப்பது.

(3) புளியன் இலையின் சாறை தண்ணீரோடு கொடுப்பது.

(4) விளக்கெண்ணெய் கொடுப்பது

### 7. அசோகதுவக்

**பெயர்கள்:**—லத்தின் சாகா இன்டிகா.

| | |
|---|---|
| தமிழ் | அசோகப் பட்டை. |
| தெலுங்கு | அசோக பட்டா. |
| கன்னடம் | அசோக செக்கா. |
| மலையாளம் | அசோக பட்டை. |
| உருடு | அசோக். |

அளவு:—இதை சூர்ணித்து உபயோகப்படுத்துவதில்லை, இதை கஷாயமிட்டு வடி கட்டி, அக் கஷாயத்தை புனல் பாகம் செய்து (ரஸக்கிரியை) உபயோகப்படுத்தப் படுகிறது. 5 தானிய எடை கொடுக்கலாம். காய்ந்த பட்டையானுல் ஒரு பாகம் பட்டைக்கு 16 பாகம் தண்ணீர் விட்டு காலிலொன்ருய்ச் சுண்டக் காய்ச்சி உபயோகிக்கவும். பச்சைப் பட்டையானுல் ஒரு பாகத்திற்கு 8 பாகம் ஜலம் விட்டு காலிலொன்ருய்ச் சுண்டக்காய்ச்சி உபயோகிக்கலாம். ½ முதல் 2 அவுன்ஸ் கஷாயத்தை கொஞ்சம் சர்க்கரையோடு கொடுக்கலாம்.

**செய்கை:**—சங்கோசன காரி, கர்ப்பாசயத்தில் உண்டாகும் கோளாறுகளிலும், ரக்தஸ்ராவகத்திலும், சிறந்தபலகாரி.

**உபயோகம்:**—இது பெண்களுக்குண்டாகும் மாதவிடாய் சம்மந்தமான கோளாறுகளுக்கு மிகவும் சிறந்த மருந்து. இதை இரும்புச் சத்தோடு மாத்திரை ரூபமாகவும் திராவக ரூபமாகவும், (அர்ஜுனரிஷ்டம்) உபயோகப் படுத்தப் படுகிறது. ஆனல் தென்னிந்தியாவில் இம் மரத்துக்கும் பதிலாக சாலை யோரங்களில் செழித்து வளர்கின்ற நாமமிடு (போலையல் தியாலங்கி ஹோலியா) என்னும் மரத்தை உபயோகிக்கிருர்கள். அதுவும் இதனுடைய தன்மைகளைப் பெற்றிருக்கிறது.

### 8. அஸ்வ கந்தா.

**பெயர்கள்:**—லத்தின் விதானிய சம்னி பெரா.

| | |
|---|---|
| தமிழ் | அமுக்ரான் கிழங்கு. |
| தெலுங்கு | பென்னேறு கெட்ட |
| கன்னடம் | ஹிரேகெட்டி. |
| மலையாளம் | அமுகு ராம். |
| உருடு | அஸ்கண்டி. |

அளவு. 20 முதல் 60 தானிய எடையை சூர்ணித்து சர்க்கரையோடும், நெய்யோடும், பாலோடும் பசி தீபனத்திற்குத் தக்கபடி உட்கொள்ளவும்.

**கஷாயம்.** மேற் குறித்த அளவு பொடியை 8 மடங்கு தண்ணீரோடும், பாலோடும் கூட்டி கொஞ்சம் வற்றவைத்து வடி கட்டி சிறிது சர்க்கரையோடாகிலும், தேனுடனுகிலும் கூட்டி தினத்திற்கு ஒரு வேளையாவது, இரு வேளையாவது உட்கொள்ளலாம்.

**செய்கை.** போஷண காரி, நரம்பு பல காரி.

**உபயோகம்.** மாமிஸ பேசிகளுக்கு வலிவைக் கொடுப்பதற்கு இந்த மருத்துவ சாஸ்திரத்தில் சிறந்த மூலிகை

களில் ஒன்று. ஜ்வரத்திலும்நரம்பு வியாதிகளாலுண்டாகும் கெடுதிகளில் மாமிஸ பேணிகளுக்கு வலிவைக் கொடுப்பதற்கு லேகியமாக உபயோகிக்கப்படுகிறது. இது ஸ்தாவர விஷம் (எட்டிக் கொட்டைவிஷம்) பறங்கிப் புண் முதலியவைகளால் உண்டாகும் விஷங்களையும் போக்கக் கூடிய மூலிகை. "பேருலேன வியாதிக்கி பென்னேரு கெட்ட" என்று தெலுங்கு நாட்டில் வழங்குகிற முதுமொழி கவனிக்கத்தக்கது.

## 9. பலா.

பெயர்கள்:—லத்தின் ஸிட கார்டி போலிய.

தமிழ் சிற்று முட்டி.
தெலுங்கு வஞ்ச பட்னல் செட்டு
கன்னடம் கதிரபோ.
மலையாளம் குருந்தோட்டி.
உருடு பாரியர்.

அளவு. பொதுவாக இதை கஷாயமாக உபயோகப்படுத்துகிறார்கள். ஒரு தோலா மூலிகையை 8 தோலா ஜலத்தில் போட்டு நாலிலொன்றாகும்படி காய்ச்சி வடி கட்டி திருகடுகு, அல்லது திப்பிலி பொடியில் ஒரு சிட்டிகை போட்டு பாலோடு கூட்டி சர்க்கரை சேர்த்து ரம்யமான பானமாக கொடுக்கலாம்.

செய்கை. வாதஹரம்.

உபயோகம். ஜ்வரத்திலும், முடக்கு வாதத்திலும் உண்டான விஷமச் செய்கைகளை நீக்குவதற்கு இது மிகவும் பிரயோஜன கரமான தென்று நம்பப்படுகிறது. அந்த கஷாயத்தை இதர மருந்துகளுக்கு அனுபானமாய்க் கொடுப்பதினால் தேகத்திலுள்ள வலியையும், வயிற்றிலுள்ள வாயுவையும் அகற்றுகிறது. இது நரம்புகளுக்கு மிகவும் பலத்தை கொடுக்கக் கூடிய சாதுவான மருந்து. அதனாலேயே இக்கஷாயத்தில் எண்ணெயும், பாலையும் கூட்டி நூறு தரம் காய்ச்சிய தைலத்திற்கு "க்ஷீரபலா தைலம்" என்று பெயர்.

## 10 பல்லாதகி.

பெயர்கள்:—லத்தின் செமிகார்பஸ் அனகார் [டியம்

தமிழ் சேங்கொட்டை.
தெலுங்கு நல்ல ஜீடிவித்து.
கன்னடம் ஜெரிக்க பீஜா.
மலையாளம் செர்குரு.
உருடு பிலவா.

அளவு. 1 முதல் 4 விதைகளை 8 அவுன்ஸ் பாலோடு சேர்த்துக் காய்ச்சி வடி கட்டிச்சிறிது சர்க்கரை கூட்டி உட்கொள்ளவும் அல்லது 8 பாகம் ஜலத்தில் இக்கொட்டைகளைப் போட்டு ⅛ சுண்டக் காய்ச்சி வடி கட்டி பாலை சேர்த்து வாயில்சிறிது நெய்விட்டு நனைத்து உட்கொள்ளவும். (சரக) பத்தியம், சாதத்தோடு நெய்யையும் பாலையும் சேர்த்துக் கொள்ளலாம் உப்பு புளி இவைகளை நீக்குக.

செய்கை. உற்சாக காரி, உதரவாத அரகாரி, பரங்கிப் புண் அரகாரி, வேதனை சாந்த காரி, கிருமினாசன காரி, பலகாரி, விருஷ்யகாரி மேல் பூசினால் கொப்பளத்தை யுண்டாக்கிச் சிவக்கச் செய்யும்.

உபயோகங்கள். பல்லாதகம் தேர்ச்சி பொருந்திய மருத்துவர்கள் கையில் மந்திர வேலையைச் செய்து நல்ல பிரயோஜனத்தைக் கொடுக்கிறது. இந்தச் சரக்கை கொடுப்பது மிகவும் தைரியமான காரியம் சில வியாதிகளில் ஆச்சரிய காரமான வேலையைச் செய்கிறது. (சாகர்) பல்லாதகியை



யனமாக உபயோகிக்கச் சொல்லுகிறார் "கபஜோக சரோகோஸ்தி நவிபந்தோஸ்தி கந யம்ந பல்லாதகம் ஹன்யாத் சீக்ர மக்னிபல ப்ரதம்" கீல் பிடிப்பு சம்மந்தமான எல்லா வியாதிகளிலும் வீக்கத்தையும் வலியையும் குறைக்க உத்தமமான மூலிகை பரங்கிப் புண்களைப் பரிகரிப்பதில் எல்லா விதமான நிலைமையிலும் உபயோகப்படும். சரக்குகளில் இது ஒன்று பத்தியம் மிகவும் இன்றியமையாதது. புண்களிலும் பழுக்காத கட்டிகளிலுமுள்ள வலிகளைக் குறைப்பதோடு கீல் வியாதிகளிலுள்ள கட்டிகளை அறவே கரைக்கிறது. இந்த மூலிகையை மூலவியாதியிலும் அஜீர்ணத்திலும் கிருமிரோகத்திலும் சுவாசகாச ரோகத்திலும் பீலிக விர்த்தியிலும் வெண் குஷ்டத்திலும் கீல் பிடிப்பு வியாதிகளிலும் சர்வ சாதாரணமாய் உபயோகிக்கப்படுகிறது. இந்த மூலிகையின் விதையை விளக்கு சுவாலையிற்காட்டி வரும் எண்ணெயை மூன்று துளிகளை ஒரு ஆழாக்கு பாலில் கலக்கி தொண்டைக்கம்மலுக்கும் உள்நாக்கு வளர்ச்சியால் உண்டாகும் இருமலுக்கும் கொடுக்கலாம். இந்த விதையை தேனில் அரைத்து புழுவெட்டு என்னும் ரோமம் உதிரும் வியாதிகளில் மேலுக்குப் பூசலாம். இந்தக் கொட்டையை சுகந்தமான திரவியங்களோடுகூட்டி எண்ணெய்காய்ச்சி கூந்தல் வளருவதற்கு மிகவும் பிரசித்தமானது. இக்கொட்டையிலிருந்து வரும் கருநிறமான தைலத்தை ஏழை மக்கள் சூடு போடுவதற்கு உபயோகிக்கிறார்கள். இக்கொட்டையின் கொப்பளிக்கும் விஷமத்தன்மை யெல்லாம் எண்ணெயை பூச ஒளிந்துவிடும். ரசாயன சாலையில் இக்கொட்டைகளைக் கொண்டு வேலை செய்யும் ஆட்களை தங்கள் கை கால் முதலிய அவயவங்களுக்கு எண்ணெயிட்டுக் கொள்வதால் இக்கொட்டைகளின் விஷமத்தன்மை ஒன்றும் செய்யாது. பூசிக் கொள்ளாவிட்டால் நமைச்சல் வீக்கம் கொப்பளம் முதலியவைகள் கொட்டையைத்தொட்டமாத்திரத்தில் உண்டாகும். இக் கொட்டைகளின் விஷமத்தன்மை நெய்யோடும் பாலோடும் கூட்டி உள்ளே கொடுத்தலாலும் எண்ணெயோடு கூட்டி மேல் பூசுவதாலும் நீங்கும். இக் கொட்டைக்கு மாற்று பலாசப் பட்டையின் கஷாயம் தாலப வேரின் கஷாயம் தான்றிக்காயின் கஷாயம். சிறுகீரைக் கஷாயம் கல்கண்டும் பாலுமேயாம்.

## 11. பாரங்கி.

பெயர்கள்:—லத்தின் கிளிரோடன் டிரான்சி [யோ னந்தஸ்.

தமிழ் கண்டு பாரங்கி.
தெலுங்கு கண்டு பாரங்கி.
கன்னடம் கண்டு பாரங்கி.
மலையாளம் சிறு தேக்கு.
உருடு பாரங்கி ப்ராமே [டீ.

அளவு:—பத்து தானிய எடை முதல் ½ தோலா வரை இதை 8 பாக ஜலத்தோடு கூட்டி அரைத்து வடி கட்டி சிறிது தேன் கூட்டியாவது சம எடையான இஞ்சியோடு சேர்த்தரைத்து தேன் கூட்டியாவது இதனுடைய தூளை நெய்யுந் தேனும் கூட்டியாவது உட்கொள்ளலாம்.

செய்கை.—உற்சாக காரி, அங்காகர்ஷண நாச காரி.

**உபயோகம்.** இம் மூலிகை தீபன காரிகளோடும் கப காரிகளோடும் வாதத்தை விலக்கக்கூடிய அநேக திரவியங்களோடும் சேர்த்து பலவித வியாதிகளிலும் கொடுக்கப்படுகிறது. (சுசுருதர்) இச் சரக்கை பரங்கி ரோகத்தினுலுண்டாகும் அநேக தோலைப் பற்றிய வியாதிகளில் மேல்ப் பூச்சாகவும் (அரிஸ்டம் சாரயம்) காக்கை வலி அபஸ் மாரத்திலும் உபயோகிக்கச் சொல்லுகிறார். தமக சுவாசத்தினுலுண்டாகிற வருத்தத்தைப் போக்குவதற்கு இச் சரக்கு மிகவும் சிரேஷ்டமானது. (பாரங்கி துல்வா சௌராஷ்டம்—யோகாத்தனுகரம்.)

## 12. பிராஹ்மி

**பெயர்கள்:**—லத்தின் ஹைடராகொடையில் [ஏசியாடிகா.
தமிழ் வல்லாரை.
தெலுங்கு சரஸ்வதா.
கன்னடம் திமேரி.
மலையாளம் பிராக்குமி.
உருடு பெரிலி, பிராக்ரு [ரேமஞ்ஜமி.

**அளவு:**—இதனுடைய பச்சையிலையை ¼ முதல் 1 தோலாவை புளியோடாகிலும் எலுமிச்சம் பழ ரசத்தோடாகிலும் உப்பையும் மிளகையும் சேர்த்து சட்ணியாக உட்கொள்ளலாம். ஒரு உச்சிக் காண்டி முதல் ½ அவுன்ஸ் சாற்றை தேனோடு கூட்டி உட்கொள்ளலாம். ½ முதல் 2 அவுன்ஸ் கஷாயத்தை உட்கொள்ளலாம். கஷாயம் செய்முறை 8 பங்கு ஜலத்தில் 1 பங்கு உலர்ந்த இலையைப் போட்டு ⅛ ஆய்காய்ச்சிக் கொள்ளவும். உலர்ந்த இலை ஒரு உச்சிக் காண்டியை ஒரு கோப்பை தெள்ளக்காய்ச்சிய ஜலத்தில் போட்டு வடிகட்டி பால் சர்க்கரை சேர்த்து தேயிலை பானத்தைப் போல் உட்கொள்ளவும். இந்த மூலிகையினால் செய்த நெய்யாவது பானகமாவது ¼ தோலா அளவு உட்கொள்ளலாம்.

**செய்கை:**—மல மூத்திரவர்த்தனி, மூளை ரசாயனி.

## 13 பிருங்கராஜ.

**பெயர்கள்:**—லத்தின் எக்லிப்ட ஹெரக்டா.
தமிழ் கரிசிலாங்கண்ணி.
தெலுங்கு குண்ட கலகரா.
கன்னடம் கர்கா.
மலையாளம் கஞ்சுன்ன.
உருடு பிருங்கராஜ், பிருங் [கரா.

**அளவு:**—5 முதல் 10 பிருங்கராஜ இலையை 5 முதல் 7 மிளகோடு சேர்த்து மோரோடு கூட்டி அரைத்து ஒவ்வொரு நாளும் காலையில் குளிகைகளாகக் கொடுக்கலாம். பனைவெல்லத்தோடு சேர்த்து மாத்திரையாக்கியும் கொடுக்கலாம். ஒரு உச்சிக் காண்டி அளவு முதல் ½ அவுன்ச வரை இந்த இலையின் சுரசத்தை 2 முதல் 4 அவுன்சு பாலோடு சிறிது சர்க்கரையைக்கூட்டியாகிலும் 4 அவுன்சு மோரோடு சிறிது உப்பைச் சேர்த்தாவது ஒவ்வொரு நாள் காலையிலும் கொடுக்கலாம். ¼ முதல் 1 தோலா இலையை இஞ்சியும் மிளகும் மற்றும் இதர சட்டினி சரக்குகளோடு சேர்த்துக் கொடுக்கலாம்.

**செய்கை:**—பித்த நிவர்த்தனி முறை ஜுர ஹாரகாரி, ரசாயனி.

**உபயோகம்:**—இது தென் இந்தியாவில் பாண்டுவில் உபயோகிக்கப்படும் பச்சை மூலிகைகளில் ஒன்று. பாண்டுவின் சில வர்க்கங்களில் இது நல்ல வேலையைச் செய்கிறது. ஜுவரத்தோடு கூடிய பாண்டுவில் மிளகோடு கூட்டிய மாத்திரையானது மிகவும் நல்ல பலத்தைத் தருகிறது. ஜீரணம் குறைவாயிருக்கும் பாண்டுவுக்கு மோரோடு கூட்டி செய்யப்பட்டது மிகவும் உத்தமமானது. கேசாங்களை கருப்பாக்குவதிலும் மூளைக்குக் குளிர்ச்சியைத்தருவதிலும் இதனால் செய்த எண்ணெய் மிகவும் சிரேஷ்டமானது.



## 14. சந்தனம்.

**பெயர்கள்:**—லத்தின் சந்தாலம் ஆல்பம்.
தமிழ் சந்தனம்.
தெலுங்கு சந்தனம்.
கன்னடம் ஸ்ரீ கெந்தா.
மலையாளம் சந்தனம்.
உருடு சேண்டல்

**அளவு:**—10 முதல் 30 தானிய எடையை சர்க்கரையோடும் நெய்யோடும் சேர்த்தாவது சர்க்கரை தேனோடு சேர்த்தாவது உட்கொள்ளவும்.

**செய்கை:**-சீதளகாரி, கிருமிநாசன காரி.

**உபயோகம்:**—சந்தனம் நம் நாட்டில் குளிர்ச்சியைத்தருவதற்கும் மூத்திரதாரையில் உண்டாகும் எரிவை மாற்றுவதற்கும் உபயோகிக்கப்பட்டுவருகிறது. இது நம் நாட்டிற் செய்கிற அனேக மருந்துகளிலும் எண்ணெகளிலும் கூட்டுச் சரக்காய் உபயோகப்படுகிறது. பித்த சம்பந்தமான கொடிய சுரத்தில் சுரத்தின் வேகையைக் குறைப்பதற்கு 100ல் ஒரு பாகம் பச்சைக் கற்பூரத்தோடு சந்தனத்தைச் சேர்த்து பன்னீரில் அரைத்து தலைக்குப் பற்றிடலாம். சந்தனத்தை தயிரோடாவது மோரோடாவது பாலின் ஏடோடாவது சேர்த்து அரைத்து கொப்பளங்களுக்கும் ராஜப் பிளவைகளுக்கும் இசிவிகளைத் தணிப்பதற்கும் சரீர தாதுக்களை அருகிப் போகவொட்டாமல் தடுப்பதற்கும் பற்றுப் போடலாம்.

சிழ்ப்பிர மேகத்திலும் பெண்களுக்குண்டாகும் அஸ்தி சிராவத்திலும் இதை அதிகமாய் உபயோகப் படுத்தலாம். சந்தனத்தை ஸ்நானப் பொடி ஊதுவத்தி செய்வதிலும் உபயோகப்படுத்துகிறார்கள். இதை தண்ணீரில் ஊரப்போட்டு வாலையில் இட்டு இறக்கின திராவகத்தை நாள்ப்பட்ட புண்களுக்கும் சிழ்ப்பிரமேகத்திற்கும் தந்து மேகத்திற்கும் மிகச் சிறந்த ஔஷதம். ஆனால் இத்திராவகத்தை தனிமையாய் கொடுப்பதைப் பார்க்கிலும் பாலோடு சேர்த்து உட்கொள்ளுவது உத்தமம் அக்கியில் ஒரு பாகம் சந்தன எண்ணெயோடு 8 பாகம் தேங்காய் எண்ணெயைக்கூட்டி பூசலாம் பச்சைக் கற்பூரத்தை பன்னீரால் ஆட்டி மத்தியானத்திலும் மாலையிலும் பூசசாந்தம் உண்டாகும். சிழ்ப் பிரமேகத்தில் 5 மினிம் சந்தன அத்தரை பாலில் சேர்த்து சர்க்கரை கூட்டி உபயோகிக்கலாம்.

### சந்தனக் கூட்டுச்சூரணம்.

சந்தனம் வெட்டிவேர், மாமஞ்சள் சர்க்கரை இவைகளின் சூரணத்தை தண்டு லோதகத்தில் (கழிநீர்) கொடுக்க ரத்த பித்தம் உடனே நிற்கும். விக்கலுக்கு சந்தனத்தைப் பாலோடு கொடுக்கலாம். ரக்த அதிசாரத்தில் ரக்தத்தோடு கூடிய வயிற்றுப்போக்கில் சர்க்கரை சந்தனம் தேன் இவைகளைக் கூட்டி கழிநீரில் கொடுக்கலாம்—சாகர்.

## 15. சித்திரைமூலம்.

பெயர்கள்:—லத்தீன் பிளம்பகோஜெலானிகா
தமிழ் சித்திரமூலம்.
தெலுங்கு சித்திரமூலம்.
கன்னடம் சித்திரமூல.
மலையாளம் கொடிவேலிக்கிழங்கு
உருடு சித்ரக்.

அளவு:—இச்சரக்கை எப்பொழுதும் தனிமையாக உள்ளுக்கு உபயோகிக்கப்படுகிறதில்லை. ஆனால் இதை இதர மருந்துச்சரக்குகளைச் சேர்த்து சூரணமாகவாவது குளிகையாகவாவது உபயோகப்படுத்தலாம். சித்திரகாதி வடி (சரகம்) சலோதரத்தில் இதன் இலையை சாட்டரணை இலையோடு சேர்த்து சமையல் செய்து உட்கொள்ளும்படி சொல்லப்படுகிறது.

இதனுடைய வேரை மேல் பூசினால் கொப்பளமும் எரிச்சலும் உண்டாகும். இந்தச்செடியில் இரண்டு வகைகள் உண்டு. சிவப்புப் பூப்பூக்கும் செடி மிகவும் சிரேஷ்டமானது.

**செய்கை:**—சிரிய அளவில் சாப்பிட்டால் பசி தீபனத்தை உண்டாக்கி வயிற்றில் உள்ள வாயுவைக்கண்டிக்கும். அதிக அளவில் சாப்பிட்டால் அளற்சியைக்கொடுக்கும்.

**உபயோகம்:**—இந்தச்சரக்கு மிகவும் கொடிய விஷம் என்று ஆங்கில வைத்தியத்தில் தள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் நம் நாட்டு வைத்தியத்தில் மிகவும் நல்ல குணத்தைக் கொடுக்கூடிய மருந்து ஆகக்கருதப்பட்டு அநேக நாள் பட்ட வியாதிகளில் மிகவும் நல்ல குணத்தைத்தருகிறது. சில அஜீரண வியாதிகளில் எல்லாச்சரக்கும் குணத்தைச் செய்யாத [illegible] இச்சரக்கு அதிகக் குணத்தைச் செய்திருக்கிறது. இது பஞ்சகோலங்களில் ஒன்று இது பசியைக் கொடுப்பதிலும் களையை உற்சாகப்படுத்துவதிலும் சிறந்தமருந்து. இதை சன்னிபாதபைரவ குளிகையில்சேர்த்துச் செய்கிறார்கள். இக்குளிகை கொடுமையான சுரத்தைக்கண்டிக்கும் உத்தம மருந்து. இது மூலரோகத்தை நிவர்த்தி செய்வதற்கு உத்தமச் சரக்கு. இதை மோரோடு உபயோகிக்கிறார்கள். இதனுடைய வேரை கூட்டிக்காய்ச்சிய பாலைக்கடைந்து எடுத்த வெண்ணெயை பழமையான ரணங்களையும் புரையோடு கூடிய ரணங்களையும் மேல்ப் பூசினால் ஆற்றலாம். ஊசியால் உட்செலுத்தலாம் இதை மேலுக்கும் உள்ளுக்கும் உபயோகப்படுத்தி வந்தால் கற்பத்தை அளிக்கக்கூடும். ஆனால் இப்படிச்செய்வது சில வேளையில் அபாயத்தை உண்டாக்கும்.

## 16. தாடிம.

பெயர்கள்:—லத்தீன் பூனிக்கா கிரேனட்டம்.
தமிழ் மாதுளை.
தெலுங்கு தானிம்மா.
கன்னடம் தாலிம்பி
மலையாளம் தாலிமாதலம்.
உருடு அனர்.

அளவு:—10 முதல் 30 தானிய எடை இப்பழத்தின் வரண்ட மேற்தோலையாவது உலர்ந்த பிஞ்சுகளையாவது பொடி செய்து கொடுக்கலாம். தித்திப்பு புளிப்பு மாதுளம் பழத்தின் இரசத்தை சம எடையான சலத்தோடு சேர்த்து 8 முதல் 10 அவுன்ஸ் ஒரு வேளைக்குக் கொடுக்கலாம். இச்செடியின் புஷ்பங்களை (ஏலம்) முதலிய வாசனைச் சரக்குகளை [illegible] சேர்த்து வேளை ஒன்றுக்கு 10 தானிய எடை கொடுக்கலாம். இப்

224708

# ஆந்திர ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்,

## முகவுரை.

இந்த ஔஷதசாலை 1920 வருஷம், ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்டு எக்காலத்திலும் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத ஔஷதங்கள் வேண்டிய அவ்வளவு சரியாக கிடைப்பதில்லையென்கிற குறையை நிவர்த்திசெய்யும்பொருட்டு, டாக்டர் ஆ. லக்ஷ்மீபதி அவர்களால் மூன்று லக்ஷரூபாய் மூலதனத்துடன் ஸ்தாபிக்கப்பட்டது. கீழ்க் கண்டவைகள் இதன் முக்கிய நோக்கங்கள்.

(1) எல்லா மருந்துச் சரக்குகளையும் மூலிகைகளையும் சேகரித்தல், தற்சமயம் வழக்கத்திலில்லாதவைகளைக் கண்டு பிடித்தல், கெட்டுப் போகாமல் காப்பாற்றி வைத்தல், வேண்டுபவர்களுக்கு நியாயமான விலைக்குக் கொடுத்தல் முதலியவை.

(2) பண்டைக் காலத்தியவையும் தற்காலத்தியவையுமாகிய ஸாதனங்களைக் கொண்டு முக்கியமான மருந்துகளை எல்லாம் செய்தல்.

(3) ஆயுர்வேத சாஸ்திரத்தை அபிவிருத்தி செய்யக் கூடியவையும் ஆயுர்வேத விஷயங்களை அறிவுறுத்தக் கூடியவையு மாகிய துண்டுக் காகிதங்கள், பத்திரிகைகள், புத்தகங்கள் முதலியவைகளைப் பிரசுரித்தல்.

இவ் வௌஷத சாலையை ஆரம்பித்த கொஞ்ச காலத்திற்குள்ளாகவே இதில் செய்யப்படும் ஔஷதங்களின் பரிசுத்தத் தன்மைக்காகவும் சிறந்த குணத்திற்காகவும் நற்புகழ் உண்டாயிருப்பது திருப்தியாக யிருக்கிறது. அகில இந்திய ஆயுர்வேத மகாநாட்டிலும் மற்ற மகாநாடுகளிலும் முதற்றரப் பொற்பதக்கங்களை பரிசளித்ததற்கேற்ப பொது ஜனங்களும் வைத்தியர்களும் எங்களிடத்தில் வைத்திருக்கும் நம்பிக்கை பெரும் பரிசாக இருக்கிறது.

தற்சமயம் கிடைக்கும் அனேக ஔஷதங்கள் சாஸ்திரப் பெயருள்ளவையாயிருப்பினும் சாஸ்திர முறைப்படி செய்யப்படாமல் சாஸ்திரத்தில் சொல்லியுள்ள முக்கியமான சரக்குகள் கூட சேர்க்கப்படாமல் செய்யப்பட்டவை யென்கிறதை கவனிக்கும் படியாகவும், மருந்துகளைப் பரிசுத்தமாகச் செய்யும் எங்கள் பார்மஸியின் மருந்துகளா வென்றறிய மருந்தின் மேல் "ஆந்திர" என்கிற பதத்தை கவனிக்கு மாறும் கேட்டுக் கொள்ளுகின்றோம். எங்கள் கம்பெனியின் "ஆந்திர ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்" என்கிற முழுப்பெயரையும் கவனிப்பீர்களாக. சாஸ்திரப்படி செய்யப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு பயனுள்ளவையென்க் கண்டறிந்த சில ஔஷதங்களை எல்லோருடைய உபயோகத்தின் பொருட்டு கீழ் குறிப்பிடுகின்றோம்.

# ஆந்திர ஆயுர்வேத பார்மஸி. (லிமிடெட்).

19, ஹாரிஸ் ரோட், மதராஸ்.

——:o:——

## சித்த மகரத்வஜம்.

க்ஷயநோய் முதலிய சரீர தாதுக்களைக் குறைக்கும் நோய்களில் கொடுத்து மிகவும் நன்மை யுண்டாயிருக்கிறது. மிகவும் உயர்ந்த ரஸாயனம். எல்லோரும் உபயோகிக்கலாம். இரத்தத்தை சுத்தப்படுத்தும். ஹிருதயத்தை பலப்படுத்துவதில் சிறந்தது. ஹிருதயத்துடிப்பு குறைந்திருக்கும்போது உபயோகித்தால் நற்பயனை யளிக்கும். ஸ்வர்ண (பொன்) பஸ்மம் கஸ்தூரி, பச்சைக்கற்பூரம் முதலிய விலையுயர்ந்த சரக்குகளைக் கொண்டு செய்யப்பட்டிருக்கிறது. ஸிபிலிஸ் நோயிலும் அதைப்போன்ற மற்ற நோய்களிலும் உபயோகிக்கத்தக்கது.

விலை 25 மாத்திரை புட்டி ரூ 5—0—0

## தந்ததாவன சூர்ணம்.

ஸரசமானதும், சாஸ்திர முறைப்படி மருந்துச் சரக்குகளைக் கொண்டு தயார் செய்யப்பட்டது மாஜிய பற்பொடி பற்களிலும் ஈரிலும் உண்டாகும் எல்லா நோய்களையும் போக்கும்.

விலை டப்பி 1-க்கு அணா 0—3—0

## சந்தனாதி தைலம்.

இந்த தைலத்தை தினந்தோறும் தலைக்கு தேய்த்து வந்தால் தலையில் உண்டாகும் பொடுவு முதலியவைகளைப் போக்கி குளிர்ச்சியை உண்டாக்கும். தலைநோய், தலைசுற்றல், முதலிய நோய்களைத் தீர்க்கும். தலைமயிர் உதிர்வதை தடுத்து. (தலைமயிருக்கு) நல்ல வலிவை உண்டாக்கி மயிரை நல்ல கருத்த முன்னதாகவும் செய்து நன்றாய் வளரும்படியும் செய்யும். இது அநேக மூலிகைகளைக் கொண்டு தைல மூர்ச்சை செய்யும் (எண்ணெயை சுத்தப்படுத்தும்) முறையையும் அநுஸரித்து தயார் செய்யப்பட்டது. . இது நல்ல வாசனையோடு இருப்பதால் மனதுக்கும் இன்ப மளிப்பதாகும்

2 ஔன்ஸ் விலை ரூ 1—0—0 1 பவுன் விலை ரூ. 7—0—0

## கஸ்தூரி மாத்திரை. (1. கிரை.)

அளவு:—1 அல்லது 2 மாத்திரை.

உபயோகம்:—ஜலதோஷம் கபம், ஸிலேஷ்ம ஜ்வரம், சிறு குழந்தைகளுக்குக் காணும் மாந்தம் இருமல் முதலியவற்றை நிவர்த்தி செய்வதற்கு வெகு உபயோகமானது, இதில் சிறந்த கஸ்தூரி, கோரோசனை, ஜவ்வாது முதலிய உயர்ந்த சரக்குகள் சேர்ந்திருக்கின்றன. முலைப்பால், வெற்றிலைச்சாறு, தேன் இவை அநுபானம்.

விலை 25 மாத்திரை புட்டி ரூ. 1.

Printed at the Dhanvanthari Press Madras.
Published by Dr. A. Lakshmipathi B. A. M. B. & C. M. at 19, Harris Road, Madras